செய்தி வெளியீடு எண் : 592 நாள் : 22.03.2023

**சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டத்தில் பட்டாசு சேமிப்புக் கிடங்கில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி – மாண்புமிகு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு**

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், வெள்ளாளபுரம் கிராமம், காட்டுவளவில் அமைந்துள்ள தனியாருக்குச் சொந்தமான பட்டாசு சேமிப்புக்கிடங்கில் இன்று மாலை எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், வெள்ளாளபுரம் சன்னாசிக்கடை பகுதியைச் சேர்ந்த திருமதி.அமுதா க/பெ. (லேட்) முருகன் (வயது 45) என்பவர் உயிரிழந்தார் என்ற செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் கடுமையான காயங்களுடன் சேலம் அரசு பொது மருத்துவமனை தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், வெள்ளாளபுரத்தைச் சேர்ந்த திரு.வேடப்பன், த/பெ.மோளையகவுண்டர் (வயது 75), அவர்களுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்க அறிவுறுத்தியுள்ளேன்.

உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு 3 இலட்சம் ரூபாயும், கடும் காயமடைந்த திரு.வேடப்பன், அவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாயும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in